2010 மே 10]

(ஆ) தனியார் பள்ளிகளில் வசூலிக்கும் கட்டணத்தை முறைப்படுத்துதல்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) தமிழகத்தில் இருக்கக்கூடிய மெட்ரிக் பள்ளிகளில், அவர்கள் இஷ்டத்திற்கு கல்விக் கட்டணத்தை உயர்த்தி, வசூல் செய்துவிட்டார்கள். அரசு இப்பொழுது கல்விக் கட்டணத்தை அறிவித்திருக்கிறது. ஏற்கெனவே கல்விக் கட்டணத்தைக் கூடுதலாக வசூல் செய்துவிட்டவர்களிடமிருந்து அதை எப்படித் திரும்பப் பெறுவது என்பது குறித்தும், அந்தக் கல்விக் கட்டணத்திற்குரியவர்கள் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டோமென்று அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருக்கக்கூடிய நிலை குறித்தும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். சமச்சீர் கல்வி, 1 ஆம் வகுப்பிலிருந்து 6 ஆம் வகுப்பைத் தவிர . . .

(அ) சென்னை, தரமணியில் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க நிலம் வழங்கியதில் முறைகேடு நடந்ததாகத் தெரிவித்தது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்கிறார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சியிலே உள்ள சில உறுப்பினர்களும், தங்களிடத்திலே காலையிலே 9 மணி 10 நிமிட அளவிலே, ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு, அதனை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று-கிராமங்களிலே சொல்வார்களே அதைப்போல, “அழிச்சாட்டியம்” செய்து, இந்த அவையிலிருந்து வெளியேறியிருக்கிறார்கள். இது ஏதோ ஒரு பெரிய பூதாகரமான விஷயம் என்று மக்கள் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள்.

இதுவொன்றும் பூதாகரமான விஷயம் அல்ல. சொல்லப்போனால், பெங்களூருவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அந்த வழக்கைப் போன்றதுகூட அல்ல இது என்பது எல்லோருக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

பெங்களூருவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அளவுக்கு மீறிய சொத்துச் சேர்த்த வழக்கு எத்தனை ஆண்டுக்காலம் நடைபெறுகிறது? ஏன் நடைபெறுகிறது என்ற கேள்விகளைப் பற்றியெல்லாம்கூட உறுப்பினர்கள் இங்கே வினா எழுப்பி, அதை இந்த அவையிலே கொண்டுவர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதையும் நீங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அவசரப்பட்டு, அதை அவைக்குக் கொண்டுவரவில்லை. ஆனால், இவர்கள் ஏதோ மாமல்லபுரம் சாலையில் ஒரு தொழிற்சாலை அமைப்பதற்காக நடைபெற்றிருக்கின்ற ஒப்பந்தம் குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு, அதை எடுத்துக்கொள்ளவில்லை என்பதைச் சாக்கிட்டு, வெளியிலே சென்றிட, வெளிநடப்புச் செய்து, பத்திரிகைகாரர்களிடத்திலே பூதாகரமாக எடுத்துச் சொல்லத் திட்டமிட்டு, இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். இந்த மாமன்றத்தினுடைய அலுவல்கள் 14, 15 ஆம் தேதியோடு முடிவுற்று, நாமெல்லாம் ஓர் இடைக்காலத்தைச் சந்திக்கக்கூடிய சூழ்நிலையில், பிரசாரம் செய்வதற்கு இந்த வெளிநடப்பும், இந்தக் குறுக்கீடும் பயன்படுமே தவிர, இதில் எந்தவிதமான சாரமும் இல்லை; சத்தும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-40

(ஆ) தனியார் பள்ளிகளில் வசூலிக்கும் கட்டணத்தை முறைப்படுத்துதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், நான் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரிடம் அறிந்துகொள்ள விரும்புவது, இப்பொழுது எந்தெந்தப் பள்ளிகளுக்கு எவ்வளவு கட்டணத்தை நீங்கள் நிர்ணயித்திருக்கிறீர்கள்? அதிலே A, B, C, D என்று ரகம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதேபோல் அதிகமாக வசூலித்த பள்ளிகள்மீது எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படும்? சமச்சீர் கல்வியை இந்த அரசு இந்த ஆண்டு எந்தெந்த வகுப்புகளுக்கு எப்படி நிறைவேற்றப்போகிறது என்பதை இந்த அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

2010 மே 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இயங்கிவரக்கூடிய சுயநிதிப் பள்ளிகளுக்குக் கட்டண விகிதங்களை நீதியரசர் கோவிந்தராஜன் அவர்களுடைய தலைமையில் இருக்கக்கூடிய குழு நிர்ணயித்து அது பத்திரிகைகளின் வாயிலாக அனைவருக்கும் தரப்பட்டிருக்கிறது. நான் ஓரிரு நாட்களுக்கு முன்பாக இந்த அவையிலே சொல்லும்போதுகூட, *4*, *5* நாட்களிலே அது வெளியிடப்படும் என்பதைச் சொன்னேன். அதில் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் தனியாகக் கட்டணங்களை நிர்ணயித்திருக்கிறார்கள். ஏறத்தாழ *10* ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகள் இருக்கின்றன. தனிப்பட்ட ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் கட்டணங்களை நிர்ணயித்து அந்த ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் அதற்கான தாக்கீதுகளை அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தனியார் பள்ளிக்கூடங்களினுடைய நிர்வாகங்களில் சில அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தக் கூட்டமைப்பின் சார்பாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் ஏற்றுக்கொள்ளாதபட்சத்தில் அந்த கமிட்டிக்கே அவர்கள் அப்பீல் செய்வதற்கு வாய்ப்பும் இருக்கிறது. ஆனால் உச்ச நீதிமன்றத்தை அணுகியிருக்கிறார்கள். நாளை உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வருகிறது. தமிழக அரசின் சார்பிலே அங்கே ஆஜராகி நம்முடைய கருத்துகள் உச்ச நீதிமன்றத்திலே வைக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். சமச்சீர் கல்வியினைப் பொறுத்தமட்டில், நான் ஏற்கெனவே இந்த அவையிலே பலமுறை அறிவித்ததைப்போல், இந்த ஆண்டு, *1* முதல் *6* ஆம் வகுப்புகளில் சமச்சீர் கல்வி முறையை நாம் அமல்படுத்தவிருக்கிறோம். அதற்கு எந்தவிதமான தடையையும் High Court கொடுக்கவில்லை. எனவே, *1* முதல் *6* ஆம் வகுப்புகளில் சமச்சீர் கல்வி முறையைக் கொண்டுவருவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. நாம் கொண்டு வருகிறோம்.

(இ) இலங்கை அகதிகள் மலேசிய சிறையில் துன்புறுத்தப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.